**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2019 ஆம் ஆண்டுக்கான குருநாகல் மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2146 - 2019 ඔක්තෝබර් මස 18 වැනි සිකුරාදා - 2019.10.18

*2146 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2674 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2680 |


**கவனிக்க.-** (i) வேலையாளர்களின் தேசிய குறைந்த பட்ச வேதனம் (திருத்தம்) சட்டமூலம் 2019, ஒற்றோபர் 11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மாகாண சபை தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2019, ஒற்றோபர் 11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) தேசிய புத்தாக்க முகவராண்மை சட்டமூலம் 2019, ஒற்றோபர் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2671-B 81569-5,403 (2019/10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழராத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தரக் கடற்படையின் கைவினை பகுதியில் கடற்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தரக் கடற்படையின் கைவினை பகுதியில் பயிலுநர் கடற்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தரக் கடற்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(அ) குடியுரிமை - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது - 2019.11.25 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 24 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம் - 5 அடி 5 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) நிறை - 47 கிலோ கிராமிற்கு (105 இறாத்தல்) குறையாதிருத்தல் வேண்டும்.

(உ) மார்பு - 32 அங்குலத்துக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் - எஸ்டீ II

(எ) தொலைப் பார்வை - இடது கண் 6/6 மற்றும் வலது கண் 6/6 (மூக்குக் கண்ணாடி மற்றும் கண்ணாடிவில்லை இன்றி)

(ஏ) குடியியல் அந்தஸ்து - விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலுநர் எவரும் பயிற்சியின் போது மற்றும் “ பலநெவி ” தரத்திற்கு தகுதி பெறும் வரையில் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3. **கல்வித் தகைமைகள் :**

(அ) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட மூன்று வருடகால முழு நேர தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறிக்காக கீழ் குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்:-

01. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (கடற்படை பொறியியல்)

02. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (மின் பொறியியல்)

03. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் மின் பொறியியல்)

04. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சுய நகரும் பொறியியல்)

05. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (கப்பற் பாகம் பழுதுபார்த்தல் மற்றும் கப்பல்களின் கட்டுமாணம்)

(ஆ) க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணித பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆங்கில மொழி மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். மேலும் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் இணைந்த கணிதப் பாடத்தில் சாதாரண சித்தி அடைந்திருத்தல் வேண்டும். (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்று ஆவணத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

<u>குறிப்பு</u> : க. பொ. த. (சா. த.) கல்வித்தகைமைகள் தொடர்பாக மேலதிக பாடங்கள் கவனத்தில் கொள்ளப்படாததுடன் விளையாட்டுத்துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திறமைகள் தொடர்பாக உரியவாறு கவனத்தில் கொள்ளப்படும்.

4. மேலே இரண்டாம் மற்றும் மூன்றாம் பந்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் வேண்டப்பட்ட அளவுகளுக்கேற்ப உயரம், பார்வை மற்றும் நிறை ஆகியவற்றைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் உயரம் உரிய அளவில் இல்லாதிருந்தும் இராணுவ சேவைக்கு பயனுள்ள விசேட திறன்கள் இருந்தால் கடற்படைத் தளபதியின் அனுமதியுடன் அவர் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(அ) விண்ணப்பதாரிகள் பயிலுநர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் அவர்கள் அடிப்படை பயிற்சி நெறிகளையும் கற்றல் வேண்டும்.

(ஆ) பயிற்சி பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும் பயிலுநர்கள் கடற்படைச் சட்டத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(இ) அனைத்து பயிலுநர்களுக்கும் சகல சின்னங்களுடனான சீருடை, உபகரணங்கள் என்பன வழங்கப்படும்.

(ஈ) பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் பயிலுநர்களுக்கு வதிவிட வசதிகள் மற்றும் உணவு கடற்படையிடமிருந்து வழங்கப்படும்.

(உ) பயிற்சிபெறும் கால எல்லையினுள் எவரேனும் ஒரு பயிலுநருக்கு தமது பயிலுநர் தன்மையை தமது சுயவிருப்பில் இடைநிறுத்துவதற்கு தேவைப்பட்டால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மூலம் பயிலுநருக்காக அதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து செலவினங்களையும் குறித்த பயிலுநரினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்.

(ஊ) பயிற்சி பெறுகின்ற கால எல்லையினுள் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒரு பயிலுநரின் துர்நடத்தை மீது அல்லது அவர் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனுமொரு காரணத்தின் மீது அவர் கடற்படைச்சேவைக்கு உகந்தவரல்ல என பொறுப்பானவர் ஒருவரினால் தீர்மானிக்கப்பட்டால் அச்சந்தர்ப்பத்திலேயே சம்பந்தப்பட்ட பயிலுநரினால் அவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கைக் கடற்படைக்கு மீளச் செலுத்துவதற்கு இணங்குவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முகவராக கடற்படைத் தளபதியுடன் பிணையொன்றிற்கு உட்படுதல் வேண்டும்.

(எ) எல்லா கடற்படையினரும் இலங்கையில் எப்பாகத்திலும் அல்லது வெளி நாடொன்றிற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படும் நியதிக்கு உள்ளாவர்.

6. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள் :** தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் மொழிக் கொள்கையினை செயற்படுத்தும் பொருட்டு இதன்பின்னர் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் சட்ட விதிகளை பின்பற்றுதல் வேண்டும்.

7. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

2019.01.01 ஆந் திகதியிலிருந்து 03/ 2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இதற்கமைய-

| | | |
|---|---|---|
| (அ) | அடிப்படைச் சம்பளம் | - ரூபா 27,026.00 |
| (ஆ) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | - ரூபா 7,800.00 |
| (இ) | சீருடை பேணுதல் கொடுப்பனவு | - ரூபா 350.00 |
| (ஈ) | கஷ்ட கொடுப்பனவுகள் (யுத்தப் பிரதேசங்களில்) | - ஆரம்ப பயிற்சியின் பின் |
| (உ) | கஷ்ட கொடுப்பனவுகள் (யுத்தமற்ற பிரதேசங்களில்) | - அடிப்படைப் பயிற்சியின் பின் |
| (ஊ) | ஏனைய கொடுப்பனவுகள் | - விசேட கொடுப்பனவு ரூபா 1000.00 |
| | | விசேட மேலதிகக் கொடுப்பனவு ரூபா 2400.00 |
| (எ) | தனிப்பயன் கொடுப்பனவு | - ரூபா 480.00 க்கு |
| (ஏ) | குறைந்தபட்ச மொத்த சம்பளம் | - ரூபா 39,056.00 |

**குறிப்பு :** கடற்படை வீரர்களின் அடிப்படைச் சம்பளம் 2020.01.01 ஆந் திகதி ரூபா 30,140.00 என்பதோடு பின்வருமாறு சம்பள உயர்வுகள் வழங்கப்படும் :

| | | |
|---|---|---|
| 2016. 01. 01 | - | 176 x 5 - 210 x 19 |
| 2020. 01. 01 | - | 300 x 5 - 370 x 19 |

(ஐ) இலவசமாக புகையிரதத்தில் பிரயாணம் செய்யக்கூடிய மூன்று சோடிப் புகையிரத ஆணைச்சீட்டு ஆண்டொன்றுக்கு (கடற்படை வீரருக்கும், துணைவிக்கும், பிள்ளைகளுக்கும், சார்ந்திருப்பவர்களுக்கும்) உரித்தாகும்.

(ஒ) முகாமில் வசிக்கும் கடற்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை அலுவலர் விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பஸ் கட்டண செலவினம் செலுத்தப்படும்.

(ஓ) இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (கடற்படை வீரருக்கு, துணைவிக்கு, பிள்ளைகளுக்கு, சார்ந்திருப்ப வர்களுக்கும்)

(ஔ) அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான கடற்படை வீரர்களுக்கு மாதாந்தம் ரூபா 2,400.00 தொடக்கம் 6,600 வரையிலான வீட்டு வாடகைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(க) திருமணமான கடற்படை வீரர்களுக்காக விவாகமானவர்களின் விடுதிகளில் வெற்றிடங்களின் அடிப்படையில் விடுதிகள் வழங்கப்படும். இதற்காக அரசாங்க சேவையினருக்கு உரியவாறு வீட்டு வாடகை அறவிடப்படும்.

8. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்திற்கேற்ப விண்ணப்பத்தின் அனைத்தும் விபரங்களுடன் மற்றும் தெளிவான தமது கையெழுத்தால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 2019.11.25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக " சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம், த. பெ. இல. 593, கொழும்பு " என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலுநர் கடற்படை தொழில்நுட்பவியலாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு மற்றும் உரிய நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் இவ் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக காணப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது தொடர்பான மேலதிக தகவல்களை www.navy.lk இணையத்தின் ஊடாக அல்லது 0117195162 தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/சிவில் நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம், விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்கலாம் என்ற சான்றிதழுடன் திணைக்களத்தின்/ சபையின் /சிவில் நிறுவனத் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அல்லது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அழைக்கப்பட்டால் விண்ணப்பதாரர்கள் பினவரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ்;

(2) விண்ணப்பித்திருக்கும் பிரிவுகளுடன் தொடர்பான கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் கல்விச் சான்றிதழ்;

(3) பாடசாலை விடுகைச் சான்றிதழ்;

(4) 06 மாதத்திற்குள் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழில்நுட்ப அல்லது அனுபவமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(6) சமீபத்தில் பெறப்பட்ட இரு நற்சான்றுப்பத்திரங்கள், அதில் ஒன்று விண்ணப்பதாரர் இறுதியாக தாம் கல்வி கற்ற பாடசாலை அதிபரினாலும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேல் விண்ணப்பதாரரைப் பற்றி அறிந்த பொறுப்பான ஒரு நபரிடமிருந்து அல்லது தற்போதைய சேவை வழங்குனரிடமிருந்து (தற்போது சேவையில் ஈடுபட்டிருந்தால்) வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(7) விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ்கள்.

(ஈ) உரிய சந்தர்ப்பங்களில் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

(உ) வேறு ஆவணங்கள் அல்லது மூலப்பிரதிகள் எவையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் அனுப்பப்பட்டு குறித்த சான்றிதழ்கள் காணாமற் போகும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக கடற்படை பொறுப்புக்கூறாது.

9. விண்ணப்பத்தில் பொய்யான தகவல்களை வழங்குதல், குறித்த பொய்யான தகவல்கள் தொடர்பாக விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுவதற்கு முன் தெரியவருமிடத்து அவரின் பயிலுனர் தன்மையை இரத்து செய்வதற்கும், தெரிவு செய்யப்பட்டதன் பின் தெரியவருமிடத்து அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கும் உட்படுதல் வேண்டும்.

10. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன**:

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்காக இலங்கைக் கடற்படையினரால் நடாத்தப்படுகின்ற ஆரம்ப மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச்சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழ்க் குறிப்பிட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு தெரிவு சபை ஒன்றின் முன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

உடல் உறுதித் தேர்வு தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள்

| உடற்பயிற்சி | காலம் (நிமிடம்/செக்கன்) | தடவைகள் |
|---|---|---|
| 1600 மீற்றர் ஓட்டம் | 07 நிமிடம் 30 வினாடி | - |
| Push up | 02 நிமிடம் | 20 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |
| Sit up | 02 நிமிடம் | 15 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |
| Arm Bending | 02 நிமிடம் | 07 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் தபாலில் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பிரயாணச் செலவுகள் அல்லது வேறு எவ்வித செலவுகளும் செலுத்தப்படமாட்டாது.

(இ) இப்பதவிக்காக விண்ணப்பதாரர் அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குப் பின் தகுதியானவர்களான விண்ணப்பதாரிகள் கடற்படை மருத்துவச் சபைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு எண்ணுகின்ற எவராயினும் அவ்வாறு சிபாரிசு செய்வது அவருக்கு சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமேயாகும். விண்ணப்பதாரர் ஒருவரை தெரிவு செய்வதற்கு எவ்விதத்திலேனும் உந்துதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியற்ற விண்ணப்பதாரிகளுக்கு அது விடயமாக அறிவிக்கப் படமாட்டாது.

(எ) *குறிப்பு*.- இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பதங்களுக்கிடையில் இணக்கமின்மை காணப்படின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான பதம் வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

**கவனிக்க**.- விண்ணப்பப்படிவத்துக்கு ஆங்கில மொழி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தவும்.

கே. கே. வி. பி. எச். த சில்வா,
டபிள்யுடபிள்யுவீ, ஆர்டபிள்யுபீ, ஆர்எஸ்பீ,
யூஎஸ்பீ, என்டியு,
வயிஸ் அட்மிரல்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்
த. பெ. இல. 593,
கொழும்பு 01.

**Application for the Post of Recruit Artificer in the Sri Lanka Navy**

01. Nationality :————————.

(State whether citizen of Sri Lanka by descent or by registration and if registration quote number and date of certificate)

02 . Stream applied (in priority order) :————————.

03. Full Name (As per the National Identity Card) :————————.

04. National Identity Card Number :————————.

05. Permanent Address :————————.

06. Postal Address :————————.

07. Date of Birth :————————.

08. Age : Years :————————. Months :————————. Days :————————. ( As at 25th November 2019)

09. Height :————————. (cm) Chest :————————. (cm) Weight :————————. (Kg)

10. Nearest Police Station to permanent address :————————.

11. District :————————.

12. Electorate :————————.

13. GS Division :————————.

14. Telephone Number :————————.

15. Civil Status :————————.

16. Gender :————————.

17. Schools Attended :————————.

18. Particulars of School or University attended :

| *Name of school/ University* | *Type of Examination* | *Year of Examination* | *Subject passed (Including grading)* |
|---|---|---|---|
| | Ordinary Level:<br>Advanced Level:<br>Other : | | |

19. Particulars of employment since leaving School/University: - (if applicable) :

| *Name and address of employer* | *Nature of employment* | *Period of service* | |
|---|---|---|---|
| | | *From* | *To* |
| | | | |

20. Particulars of parents:-

| *Full Name* | *Place of birth* | *Occupation* | *Present Address* |
|---|---|---|---|
| Father | | | |
| Mother | | | |

21. Any special qualification for the post :—————.

22. Details of current achievements in sports (Give details of teams and competitions participated in with dates/ years etc. and standards / levels achieved) :—————.

23. Other achievements of note at School / University or at outside organizations (Give details with dates /years etc.): :—————.

24. Any previous service in the Armed Force or Volunteer Force, Cadet Corps or Boy Scout Organization :—————.

25. Have you applied earlier to join the Sri Lanka Navy or any of the Armed Services or Police, if so give details and the outcome of such applications :—————.

26. Have you being convicted or bound over by a civil or military court, if so give details :—————.

27. If employed earlier in a Government Department or in the Public Sector / Board / Corporation (including the Central Bank, National Bank, Universities, Joint Stock Companies controlled by the Government etc.) reasons for termination of employment :—————.

28. Particulars of testimonials: -

| *Name* | *Designation* | *Postal Address* |
|---|---|---|
| | | |

29. Declaration to be signed by the applicant:-

I declare on my honor that answers given to the above questions are true and correct to the best of my knowledge and belief. I have read and understood the procedure which will be adopted and the rules which will apply in respect of those candidates who are selected for the Artificer branch in the Sri Lanka Navy published in the *Gazette* of the Government of Sri Lanka.

—————

Signature of applicant.

Date :—————.

*10-846*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை- 2019

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. இப் பரீட்சைக்குரிய பாட விதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் இலக்கம் 1885/ 31 கொண்ட 2014.10.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) பரீட்சை ஒழுங்கு விதிகள் - வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

| பாட இல. | பாடம் | காலம் | புள்ளிகள் | சித்தியடைவதற்கு பெறவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை | 3 மணித்தியாலம் | 100 | 40 |
| 02 | பாடசாலைத் திட்டமிடல் | 3 மணித்தியாலம் | 100 | 40 |
| 03 | கல்வியின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் | 3 மணித்தியாலம் | 100 | 40 |

**பாட விதானம் :-**

(i) *பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை.*- பாடசாலை ஒன்றின் சிறந்த நிருவாகத்திற்காக அதிபரின் செயற்பாட்டுப் பணிகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் விளக்கத்தை பரிசீலனை செய்வதற்கான கேள்விகள் இதில் அடங்கியுள்ளன. பாடசாலை முகாமைத்துவ முறைகள், நேரசூசியைத் தயாரித்தல், பொறுப்புக்களைப் பகிர்தல், பாடசாலை அபிவிருத்திக்காக மக்கள் பங்கேற்பு, பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் நலன்புரி, மாணவர்களுக்குப் பொருத்தமான பாடசாலை சார்ந்த எண்ணக்கரு பாடசாலையைக் கேந்திரமாகக் கொண்ட கல்வி ஆகிய துறைகள் தொடர்பில் அறிவு மதிப்பீடு செய்யப்படும்.

(ii) *பாடசாலைத் திட்டமிடல்.*- அபிவிருத்தியின் முன்னோடியான அதிபர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் விளக்கத்தைப் பரீட்சிப்பதற்கான கேள்விகள் இதில் உள்ளடங்கியுள்ளன. பாடசாலை முகாமைத்துவ சபை, பாடசாலையொன்றின் நோக்கு மற்றும் பணிக்கூற்று பாடசாலைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரித்தல், இணைந்த திட்டங்கள், நீண்ட கால மற்றும் குறுகிய காலத் திட்டங்கள், வருடாந்தம் அமுலாக்கல் திட்டங்கள், பாடசாலை வலையமைப்பு மற்றும் வளத் திட்டமிடல், பிரதேச அபிவிருத்திக்கு பாடசாலையின் பங்களிப்பு ஆகிய துறைகள் தொடர்பான அறிவு மதிப்பீடு செய்யப்படும்.

(iii) *கல்வியின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள்.*- கற்றல் மற்றும் கற்பித்தல் தொடர்பான புதிய எண்ணக்கரு, அனுபவங்கள் ஊடாக கற்றல், தர்க்க ரீதியிலான சிந்தனைகள், கல்வியின் சமநிலை, விசேட தேவைகள் கொண்டோருக்கான கல்வி, முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி, ஆயுட்கால கல்வி, திறனை அடிப்படையாகக் கொண்ட கல்வி, வாழ்வதற்கான கல்வி, மாணவர் ஆலோசனை மற்றும் தொழில்சார் வழிகாட்டல் ஆகிய விடயங்கள் தொடர்பிலான அறிவு மதிப்பீடு செய்யப்படும்.

03. **பரீட்சையின் மொழி மூலம்** : சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பரீட்சை நடைபெறும். விண்ணப்பதாரி விரும்பிய ஒரு மொழி மூலத்தில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

04. பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேற்று ஆவணம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படும். அதன் பிரகாரம் அப்பெறுபேறுகள் www.moe.gov.lk எனும் கல்வி அமைச்சின்

இணையத்தளத்தில் வெளியிடப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அனுப்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

05. இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 01 தொடக்கம் 07 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமான தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பப் படிவங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகிறேன். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றேல், விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

**போலித் தகவல்களுக்கான தண்டனை.-** விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய பரீட்சார்த்தி தகைமைற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி தன்மை இரத்துச் செய்ய முடியும்.

06. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விடுவிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

07. விண்ணப்பப்படிவத்தை 2019, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர்/ வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது அவர்களது சேவைப் பொறுப்பாளரினால் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

08. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் ஆரம்ப எடுகோளுக்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்கத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ் விபரங்களுடன் பிரவேச அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்புவதற்குரிய பெக்ஸ் இலக்கத்துடன் கோரிக்கை கடிதத்தை பெக்ஸ் மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வது பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதியும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்வதாக ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

09. i. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் பரீட்சாத்தியின் கையொப்பம் நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதலாவது தினத்தில் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதிப்பத்திரத்தை மண்டபப் பொறுப்பாளருக்கு கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

ii. மேற்கூறப்பட்ட 08 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிறைவேற்றத் தவறும் பரீட்சார்த்திகளின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

10. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் சகல பாடங்களிற்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தி அடையும் வகையில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் யாதாயினும் ஓர் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:-

i. தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தினை உறுதிப்பத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காத வகையில் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும்.

அவ்வாறு தம் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்த மறுக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்தியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இருகாதுகளை மறைக்காத வண்ணம் இருத்தல் வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்**:

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது;
(ஆ) முழுமையான பரீட்சை அல்லது அதில் ஒரு பகுதிக்காக முதற்தடவையில் தோற்றுகையில் கட்டணம் அறவிடப்படமாட்டாது;
(இ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைகளுக்காகவும் அறவிடப்படும் கட்டணம் பின்வருமாறு :

முழுமையான பரீட்சைக் கட்டணம் : ரூ. 500
ஒரு பாடத்திற்காக : ரூ. 250

இப் பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 20-03-02-13 இல் வைப்பிலிடக் கூடிவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராத வண்ணம் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

12. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். இச்சட்டங்களை மீறும்பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டும் என்பதனை அறியத்தருகிறேன்.

13. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் வாசகங்களில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும்.

14. இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்தை,
2019, ஒற்றோபர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019**

**Efficiency Bar Examination for Officers in Class II of Sri Lanka Principals' Service - 2019**

(கோட்ட/ வலயக் கல்விப் பணிப்பாளர் /மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். பரீட்சையின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழி
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐

02. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ+ம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) இறுதிப் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H.M.S.K.)
(iii) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :----.

03. முகவரி
(a) தனிப்பட்டது :----.
(b) அலுவலகம் :----.
(c) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிடல் எழுத்தில்) :----.
(d) தொலைபேசி இலக்கம் (அலுவலகம்) :----.

04. (i) அதிபர் சேவையின் வகுப்பு/தரம் :----.
(ii) பாடசாலை/ அலுவலகம் :----.
(iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

05. (i) தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(iii) (ஆண்/பெண்) பால் : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் குறிப்பிடவும்)

06. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

07. வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்தியின் (அ) இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள்.

பாட இல. 01 - பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை ☐
பாட இல 02 - பாடசாலைத் திட்டமிடல் ☐
பாட இல 03 - கல்வியின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் ☐

(உரிய பாட இலக்கத்தைக் /இலக்கங்களைக் உரிய கூட்டில் /கூடுகளினுள் இடவும்.)

08. இதற்கு முன்னர் இலக்கம் 1086/ 26 ஆம் இலக்க 1999.07.02 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கமைய இடம்பெற்ற வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் கல்வி நிருவாகம் மற்றும் மேற்பார்வைப் பாடத்தில் சித்தியடைந்த உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 33/2014 இற்கமைய இவ் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டலில் பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வைப் பாடத்தில் சித்தியடையும் தேவையிலிருந்து விடுவிக்கப்படுவர். இப்பாடத்தில் சித்தியடைந்திருப்பின் ஆண்டு, சித்தி மற்றும் மொழியைக் குறிப்பிடவும்.

| பாடம் | ஆண்டு | சித்தி | மொழி மூலம் |
|---|---|---|---|
| பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை | | | |

09. பரீட்சைக் கட்டணம்:-

(i) பணம் செலுத்தப்பட்ட தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) செலுத்தப்பட்ட தொகை :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச் சீட்டு இல :----.

பற்றுச்சீட்டைக் கழராது இங்கே ஒட்டவும். (பற்றுசீட்டின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்)

10. மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிசெய்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. பரீட்சை ஆணையாளர் நாயகம்.-

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது கோட்டத்தின்/வலயத்தின்/மாகாணத்தின் உத்தியோகத்தர் என்பதையும் அவர் இன்றைய தினம் என் முன்னிலையில் இதில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதி செய்கிறேன்.

-----,
கோட்ட/வலயக் கல்விப் பணிப்பாளர்/
மேலதிக மாகாணக் கல்விப்
பணிப்பாளர்/ மாகாணக் கல்விப்
பணிப்பாளரின் கையொப்பம்

முகவரி :-----.
திகதி : -----.
(பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தவும்) (பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்.)

10-659/1

## கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. இப் பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் இலக்கம் 1885/31 கொண்ட 2014.10.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக பாடவிதானம் (அட்டவணை 01) மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் (அட்டவணை 02) கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) (அட்டவணை 01) - பரீட்சை முறை

| பாட இல. | பாடம் | காலம் | புள்ளிகள் | சித்தியடைவதற்கு பெறவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 02 | பாடசாலையின் நிதி நிருவாகம் மற்றும் நிதி ஒழுங்குக் கோவை | 2 மணித்தியாலம் | 100 | 40 |

(ஆ) (அட்டவணை 02) - பாட விதானம்

| பாட இல. | பாடம் | பாடவிதானம் |
|---|---|---|
| 01 | தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் | தாபன விதிக் கோவையின் VII, VIII, IX, X, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பிலான அறிவு பரிசீலனை செய்யப்படும். |
| 02 | பாடசாலையின் நிதி நிருவாகம் மற்றும் நிதி ஒழுங்குக் கோவை | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, நிதி நிருவாகம் மற்றும் நிதிப் பொறுப்புக்களை கையளித்தல், நிதிப் பொறுப்பேற்பினை கணக்குகளில் பதிதல் மற்றும் மீள் கட்டமைப்புக் கொடுப்பனவு, அரச நிதியைப் பொறுப்பேற்றல், கட்டுநிதி மற்றும் வங்கிக் கடன், பணிகள் மற்றும் சேவைகள், பொருட் கணக்கெடுப்பு கணக்காய்வு விசாரணைகள், அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் நாளேடுகள், வருமான மற்றும் செலவினச் சுருக்கம், வங்கி இணக்கக்கூற்று, செலுத்தப்படாத கொடுப்பனவு, கடமைத் தொலைபேசி தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் நிதி ஒழுங்குக் கோவைகள் தொடர்பான பொது விளக்கம் பரிசீலனை செய்யப்படும். |

03. **பரீட்சையின் மொழி மூலம்** : சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பரீட்சை நடைபெறும். விண்ணப்பதாரி விரும்பிய ஒரு மொழி மூலத்தில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தினை மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

04. பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேற்று ஆவணம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படும். அதன் பிரகாரம் அப்பெறுபேறுகள் www.moe.gov.lk எனும் கல்வி அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அனுப்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

05. இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 01 தொடக்கம் 07 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகிறேன். மேலும், பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றேல், விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

***போலித் தகவல்களுக்கான தண்டனை.-*** விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய பரீசாத்தி தகைமைமற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீசைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச் செய்ய முடியும்.

06. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விடுவிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

07. விண்ணப்பப்படிவத்தை 2019, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர்/வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது அவர்களது சேவைப் பொறுப்பாளரினால் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

08. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் ஆரம்ப எனும் எடுகோளுக்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்குமுன்னர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்திவேண்டியவராயின் கட்டணத்தைசெலுத்திய அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்படும். விண்ணப்ப தாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்கத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ் விபரங்களுடன் பிரவேச அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்புவதற்குரிய பெக்ஸ் இலக்கத்துடன் கோரிக்கை கடிதத்தை பெக்ஸ்மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளது பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியவராயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதியும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்வதாக ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

09. i. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் பரீட்சாத்தியின் கையொப்பம் நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதலாவது தினத்தில் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதிப் பத்திரத்தை மண்டபப் பொறுப்பாளருக்கு கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

ii. மேற்கூறப்பட்ட 08 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிறைவேற்றத் தவறும் பரீட்சார்த்தி களின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

10. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் சகல பாடங்களிற்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தி அடையும் வகையில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் யாதாயினும் ஓர் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:-

i. தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தினை உறுதிப்பத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காத வகையில் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தம் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்த மறுக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்தியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இருகாதுகளை மறைக்காத வண்ணம் இருத்தல் வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்**:

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது;
(ஆ) முழுமையான பரீட்சை அல்லது அதில் ஒரு பகுதிக்காக முதற்தடவையில் கட்டணம் அறவிடப்படமாட்டாது;
(இ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைகளுக்காகவும் அறவிடப்படும். கட்டணம் பின்வருமாறு :

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக் கட்டணம் | : ரூ. 500.00 |
| ஒரு பாடத்திற்காக | : ரூ. 250.00 |

இப் பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 20-03-02-13 இல் வைப்பிலிடக் கூடிவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராத வண்ணம் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

12. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். இச்சட்டங்களை மீறும்பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டும் என்பதனை அறியத்தருகின்றேன்.

13. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் வாசகங்களில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும்.

14. இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்தை,
2019, ஒற்றோபர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019**

**Efficiency Bar Examination for Officers in Class 3 of Sri Lanka Principals' Service - 2019**

(கோட்ட/ வலயக் கல்விப் பணிப்பாளர் /மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். பரீட்சையின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழி
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐

02. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ+ம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) இறுதிப் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H.M.S.K.)
(iii) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :----.

03. முகவரி
(a) தனிப்பட்டது :----.
(b) அலுவலகம் :----.
(c) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிடல் எழுத்தில்) :----.
(d) தொலைபேசி இலக்கம் (அலுவலகம்) :----.

04. (i) அதிபர் சேவையின் வகுப்பு/தரம் :----.
(ii) பாடசாலை/ அலுவலகம் :----.
(iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

05. (i) தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(iii) (ஆண்/பெண்) பால் : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் குறிப்பிடவும்)

06. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

07. வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்தியின் (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள்.

பாட இல. 01 - தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் ☐
பாட இல 02 - பாடசாலை நிதி நிருவாகம் மற்றும் நிதி ஒழுங்குக் கோவை ☐
(உரிய பாட இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

08. பரீட்சைக் கட்டணம்:-

(i) பணம் செலுத்தப்பட்ட தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) செலுத்தப்பட்ட தொகை :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச் சீட்டு இல :----.

| |
|---|
| பற்றுச்சீட்டைக் கழராது இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்) |

09. மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிசெய்கின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. பரீட்சை ஆணையாளர் நாயகம்.-

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது கோட்டத்தின்/வலயத்தின்/மாகாணத்தின் உத்தியோகத்தர் என்பதையும் அவர் இன்றைய தினம் என் முன்னிலையில் இதில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதி செய்கின்றேன்.

-----,
கோட்ட/வலயக் கல்விப் பணிப்பாளர்/
மேலதிக மாகாணக் கல்விப்
பணிப்பாளர்/ மாகாணக் கல்விப்
பணிப்பாளரின் கையொப்பம்

முகவரி :-----.
திகதி : -----.
(பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தவும்) (பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்.)

10-659/2

---

கலாசார அலுவல்கள் திணைக்களம்

## வானொலி அரச விருது விழா -2020

**அறிமுகவுரை**

இலங்கையின் இலத்திரனியல் தொடர்பாடல் வரலாற்றில் மிகவும் பழமையான ஊடகமாக காணப்படுவது வானொலி ஊடகமாகும். இலங்கை வானொலி சேவை, 1925, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதியளவில் பிரதான பொறியியலாளர் எட்வட் ஹாபர் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை இலங்கை வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்டு 93 வருடங்கள் கடந்துள்ளன.

20 ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் பிரித்தானியாவிலும் இலங்கையிலும் ஆரம்பமான வானொலி சேவைகள், கால ரீதியாக பெரும்பாலும் சமமாக உள்ளபோதிலும், பிரிட்டிஷ் புரோட்காஸ்ரின் கோர்பரேசன் அல்லது பீ.பீ.சி. நிறுவனம் நடைமுறைக்கு பொருந்தக்கூடிய நவீன மயமான நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி முழு உலகிற்கும் செய்திகளையும் மற்றும் முன்மாதிரியான நிகழ்ச்சிகளை வழங்கும் வானொலிச் சேவை நிறுவனமாக மாற்றமடைந்துள்ளது. எனினும் இலங்கையின் வானொலிச் சேவைகள் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஒலிபரப்பாகும் ஏனைய வானொலிச் சேவைகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது இவை தொடர்பாக கலந்துரையாடும் வகையில் அமைந்துள்ளன. இவை தொடர்பாக கவனத்திற்கொள்ளும் வகையில் அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கின்றது என்பதே எமது நம்பிக்கையாகும்.

பலதரப்பட்ட காரணங்களால் உலகளாவிய ரீதியில் அநேகமான சமூகங்களால் பல தசாப்த காலமாக முதன்மையானதாக பீ. பீ. சீ. நிறுவனத்தினை கருதுவதற்கான காரணம் அது முன்மாதிரியாகக் காணப்படுவதனாலேயாகும். பீ. பீ. சீ. நிறுவனத்தின் கொள்கைகள், தொழில் தர்மம், கருத்துக்கள், புத்தாக்க முறைமை மற்றும் முன்மாதிரியான தொழில்சார் நிபுணத்துவங்கள் என்பன உலகம் பூராகவுள்ள

வானொலி தொடர்பாட்டாளர்களுக்கு ஆலோசனைகளாகவும் முன்மாதிரியான முறையில் சக்தி வாய்ந்ததாக அமைகின்றது.

முன்னைய காலத்திலிருந்தே, இலங்கையின் வானொலிசார் சேவையாளர்களுக்கு சில சந்தர்ப்பங்களின் போது பீ. பீ. சீ. நிறுவனத்தில் சேவையாற்றும் வாய்ப்புகள் கிடைத்தன. அவ்வாறான வாய்ப்புகள் மூலம் அங்கு பயிற்சி பெற்ற அலுவலர்கள் தாம் பெற்ற அனுபவங்களைக் கொண்டு மீண்டும் இலங்கைக்கு திரும்பி ஒலிபரப்புத் துறையில் சிறந்த சேவைகளையாற்றக் கூடியதாக அமைந்தன.

இத்தகையவொரு கீர்த்திமிகு வரலாற்றையும், தரமான பின்னணியையும் கொண்ட எமது நாட்டின் வானொலி சேவை பலதரப்பட்ட காலப்பகுதிகளின் போது சிறப்பான முறையில் ஒலிபரப்புக்களை மேற்கொண்டுள்ள போதிலும், வானொலி துறைசார்ந்தோரின் ஆக்கப்பூர்வமான சிறப்பம்சங்கள் அரச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருந்தது.

சினிமா, தொலைக்காட்சி, இலக்கியம், நாடகம், நடனம், இசை மற்றும் ஏனைய கலை ஆக்கங்கள் தொடர்பான துறைகளில், அவற்றுக்கே தனிப்பட்ட அரச விருது வழங்கல் திட்டங்கள் காணப்பட்டன. இவை பலதரப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பில் கீழ் அரச விழாக்களாகவும் விருதுகள் வழங்கும் வைபவங்களாகவும் வருடாந்தம் இடம் பெறுகின்றன. ஆயினும் ஏதோவொரு காரணமாக வானொலி தொடர்பாடல் சேவை அனைவராலும் கைவிடப்பட்டு போயிருந்ததாகவே தென்படுகிறது. ஆயினும், இன்று குறைந்தபட்சமாக மூன்று தசாப்த காலங்களாக வளர்ச்சியடைந்துள்ள வானொலி சேவைகளும், அதில் ஈடுபடுவோரும், வானொலி சேவைகள் ஊடாக ஒலிபரப்புகின்ற பல்வகையான நிகழ்ச்சிகளும் வெறுமனே பொழுது போக்கு நிகழ்ச்சிகளாக காணப்படுவதை அவதானிக்கமுடிகின்றது. இந் நிலையை கட்டுப்படுத்தி சமூகத்திற்கு பயனுள்ள, விழிப்புணர்வூட்டும் மனதை அமைதிப்படுத்துகின்ற பலதரப்பட்ட தரமான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவதற்கு முயற்சிகள் எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இத்தகையதொரு சூழலின் கீழ், அரச கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக ஆர்வம் கொண்ட வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆண்டுதோறும் வானொலி அரச விருது வழங்கல் விழா நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**நோக்கம் :**

**பிரதான நோக்கம் :**

பல்வேறு இரசனைகள் கொண்ட வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு தொடர்பாடல் துறையினுள் இரசிகர்களின் ஈர்ப்பு மற்றும் அறிவினை விரிவாக்க, மக்களால் செவிசாய்க்கப்படுகின்ற தரமான மற்றும் இரசனையுடன் கூடிய சிறந்த நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்யப்படுவதற்காக படைப்பாளர்களையும் மற்றும் சேவை நிலையங்களையும் ஊக்குவித்தல்.

**ஏனைய நோக்கங்கள்**

1. உயர் தரத்திலானதும் ஆக்கப்பூர்வமானதுமான நிகழ்ச்சிகளை தயாரிக்கும் வானொலி கலைஞர்களை பாராட்டுதல்.

2. இலங்கை வானொலி கலையின் வரலாறு முழுவதிலும் ஒப்பற்ற ஊடகப் பணியை புரிந்திருக்கும் சிறந்தோரை கௌரவித்தலின் பொருட்டு போதுமான விருதுகள் வழங்கல்.

3. வானொலி துறையின் எதிர்கால முன்னேற்றத்திற்காக பங்களிக்கும் இளம் வானொலி கலைஞர்களை ஊக்குவித்தல்.

4. இலங்கை வானொலி ஊடகத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்காக உழைப்போருக்காக வழிகாட்டுதல்களை வழங்குதல்.

5. உயர் தரத்திலான வானொலி ஊடகக் கலையை உருவாக்குவதற்குரிய பின்னணியை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**வானொலி அரச விருது விழா - 2020**

இலங்கையில் மின்னியல் தகவல் தொடர்பாடலான வானொலிக்கு ஒன்பது தசாப்த காலத்திற்கும் அதிகமான வரலாறொன்று காணப்படுகின்றது. அதில் ஊடகத்துறையில் சேவையாற்றுவோரை அரச மட்டத்தில் பாராட்டி கௌரவிக்கும் நோக்குடன் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக் கழகத்தின் வானொலி ஆலோசனைக் குழு ஆகியவற்றினூடாக ஏற்பாடு செய்யப்படும். "வானொலி அரச விருது விழா - 2020" இம்முறையும் வெகுவிமரிசையாக நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விருதுவிழா தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரச மற்றும் தனியார் வானொலி அலை வரிசைகளுக்கும் பொதுவானது.

**போட்டிப் பிரிவுகள்**

01. செய்தி மற்றும் சமகால பிரிவு

- 1.1 சிறந்த செய்தி ஆசிரியர் ;
- 1.2 சிறந்த செய்தி வாசிப்பாளர் (ஆண்) ;
- 1.3 சிறந்த செய்தி வாசிப்பாளர் (பெண்) ;
- 1.4 சிறந்த ஆராய்ச்சிபூர்வமான செய்தி அறிக்கை.

02. நானாவித நிகழ்ச்சி மாதிரிகள்

- 2.1 சிறந்த தனிச்சிறப்பு நிகழ்ச்சி
- 2.2 சிறந்த இசை நிகழ்ச்சி
- 2.3 சிறந்த நகைச்சுவை நிகழ்ச்சி
- 2.4 சிறந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி

(கல்வி, ஆன்மீகம், சிறுவர், பெண்கள், சுகாதாரம், விளையாட்டு, சுற்றாடல், தேசிய நல்லிணக்கம், கலாசார மற்றும் கலைத்தொனிப்பொருளாகக் கொண்ட நிகழ்ச்சிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.)

03. வானொலி நாடகம்

- 3.1 சிறந்த வானொலி நாடகப் பிரதியாளர்
- 3.2 சிறந்த வானொலி நாடக நடிகர்
- 3.3 சிறந்த வானொலி நாடக நடிகை
- 3.4 சிறந்த வானொலி நாடகத் தயாரிப்பு
- 3.5 சிறந்த வானொலி நாடகப் பிரதியாளர் (சிறுவர்)
- 3.6 சிறந்த வானொலி நாடக நடிகர் (சிறுவர்)
- 3.7 சிறந்த வானொலி நாடக நடிகை (சிறுவர்)
- 3.8 சிறந்த வானொலி நாடகத் தயாரிப்பு (சிறுவர்)

04. ஏனைய விருதுகள்

- 4.1 சிறந்த உரைஞர்
- 4.2 சிறந்த நிகழ்ச்சித் தொகுப்பாளர் (ஆண்)
- 4.3 சிறந்த நிகழ்ச்சித் தொகுப்பாளர் (பெண்)
- 4.4 சிறந்த ஒலி அமைப்பு
- 4.5 சிறந்த ஆரம்ப விளம்பர குறியிசை (Jingle)
- 4.6 சிறந்த வானொலி நேர்முக வர்ணனையாளர் (ஆண்/பெண்)

➢ **வானொலி பிரதிபா கௌரவ விருது**

(இலங்கை வானொலி ஊடகக் கலையின் வளர்ச்சிக்காக அதியுன்னத சேவையாற்றிய தலைசிறந்த வானொலிக் கலைஞர்களுக்கு "பிரதிபா பிரணாம" கௌரவ விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும்.)

**போட்டி நிபந்தனைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விபரங்கள் (விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன் வாசித்துப் பார்க்கவும்)**

01. **அறிவுறுத்தல்கள்**

- 1.1 இலங்கையில் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சிகள் மாத்திரமே போட்டிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- 1.2 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகள் மாத்திரமே போட்டிக்கு தகுதியுடையவையாகும்.
- 1.3 அனைத்து போட்டிகளுக்கும் விண்ணப்பிப்பதற்கு குறித்த விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பயன்படுத்தவும்.
- 1.4 விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 01 தொடக்கம் 05 வரையான பகுதி விண்ணப்பதாரரால் பூரணப்படுத்தப்பட்டு இலக்கம் 06 தமது நிறுவனத் தலைவரால்/ பிரதிநிதியால் சிபாரிசு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

02. **விருதுகள் தொடர்பான பிரதிநிதித்துவம்**

- 2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள போட்டிப்பிரிவுகளுக்கு மாத்திரமே விருதுகள் வழங்கப்படும்.
- 2.2 சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான சகல நிகழ்ச்சிகளுக்கும் விருது வழங்கல் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும்.
- 2.3 பிரதான விருதுகளுக்கு மேலதிகமாக ஆக்கப்பூர்வமான வகையில் பங்களித்துள்ளமைக்காக நடுவர்களின் விசேட விருதுகள் (ஜூரி விருது) மற்றும் விசேட திறமை விருதுகள் சான்றிதழ்கள் வழங்குதல் தொடர்பாகவும் கவனத்திற் கொள்ளப்படும்.

03. **விண்ணப்பித்தல்**

- 3.1 ஒரு பிரிவில் (Category) ஒரு விண்ணப்பதாரியால் ஒரு விண்ணப்பம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
- 3.2 ஒவ்வொரு பிரிவுகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- 3.3 சிறந்த வானொலி நாடகப் பிரதியாளர் மற்றும் செய்தி ஆசிரியருக்காக விண்ணப்பிக்கும் போது குறித்த பிரதியாக்கத்திற்கான பிரதிகளும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. **சமர்ப்பித்தல்**

- 4.1 தங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுடன் குறித்த வானொலி நிகழ்ச்சி அடங்கிய இருவெட்டு (CD) சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களும் குறித்த வானொலி நிகழ்ச்சி அடங்கிய இருவெட்டும் (CD) மீண்டும் தங்களுக்கு வழங்கப்படமாட்டாது.
- 4.2 குறித்த ஒலிபரப்பின் பின்னர், இந்த விருது விழா போட்டிப் பிரிவுகளுக்காக விசேடமாக தயாரிக்கப்பட்டு (Edited) அனுப்பப்படும் ஆக்கங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தல் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படமாட்டாது என்பதனை கவனத்திற்கொள்ளவும்.
- 4.3 படைப்புக்கள் வார நாட்களில் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரை மாத்திரமே பெற்றுக்கொள்ளப்படும்.
- 4.4 தங்களின் அனைத்து படைப்புக்களும்-

  பணிப்பாளர்,<br>
  கலாசார அலுவல்கள் திணைக்களம்,<br>
  8 ஆம் மாடி,<br>
  "செத்சிறிபாய",<br>
  பத்தரமுல்லை.

  என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (தொடர்புகளுக்கு தனுஷாந் - 011-8720310112/011-882551 லசந்தி)

05. **பொது நிபந்தனைகள் :**

5.1 விண்ணப்பங்களை தபாலில் பெற்றுக்கொள்ள தங்கள் முகவரி எழுதப்பட்ட கடித உறையொன்றினை மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

5.2 www.culturaldept.gov.lk https://www.facebook.com/culturaldept.gov.lk/?ref=bookmarks என்ற இணையத்தளத்திலும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

5.3 தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "2020 - வானொலி அரச விருது விழா" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.4 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி, 2019, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதியாகும். (குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

5.5 விண்ணப்பதாரர்கள் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகள் மற்றும் போட்டி நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியதுடன், நடுவர்களின் தீர்மானமே இறுதி முடிவாகும் என்பதனை கவனத்திற் கொள்ளவும்.

அனுராஷா கோகுல பர்னாந்து,
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வானொலி அரச விருது விழா- 2020**

கலாசார அலுவல்கள் திணைக்களம்

| அலுவலக உபயோகத்திற்கு | | |
|---|---|---|
| விண்ணப்பப்படிவ இல. | | |

1. விண்ணப்பிக்கும் வானொலி நிறுவனம் :----.
   1.1 சுருக்கப் பெயர் :----. (உதாரணம் : SLBC)
   1.2 முகவரி :----.
   1.3 நிரந்தர தொலைபேசி இலக்கம் :----.
   1.4 தொலைநகல் :----.
   1.5 மின்னஞ்சல் :----.
   1.6 இணையத்தளம் :----.
2. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
   2.1 தொழில் முகவரி :----.
   2.2 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.
3. விண்ணப்பிக்கும் பிரிவின் பெயர் :----.
   (தகவல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டவாறு / உ-ம் : வானொலி நாடகம், நாடகப் பிரதி)
   3.1 விண்ணப்பிக்கும் பிரிவின் இலக்கம் :----.
   3.2 நிகழ்ச்சியின் பெயர் :----.
   3.3 ஒலிபரப்பப்பட்ட திகதி மற்றும் நேரம் :.............../ ................
   3.4 நிகழ்ச்சியின் காலம் (Duration) : மணி : [ ] நிமிடம்: [ ] விநாடி: [ ]

4. பங்களிப்பு
(தயாரிப்பு/ பிரதியாக்கம்/ தொகுப்பாளர்/ நிகழ்ச்சித் தொகுப்பாளர்/ வர்ணனையாளர்/ வேறு / இசை/ ஒலி அமைப்பு/ ஒலித் தொகுப்பு/ குரல்/ இசைத்தல்/ வேறு....)

i. ..........................................................................................................
ii. ..........................................................................................................
iii. ..........................................................................................................
iv. ..........................................................................................................
v. ..........................................................................................................
vi. ..........................................................................................................
vii. ..........................................................................................................

5. விண்ணப்பதாரியின் கூற்று :
.................................................................... ஆகிய நான், வானொலி அரச விருது வழங்கல் விழா 2020 இன் போட்டி நிபந்தனைகளுக்கு இணங்குவதாகவும், நடுவர் குழுவின் முடிவு இறுதி முடிவு என்பதை ஏற்பதாகவும் குறிப்பிடுகிறேன்.

என்னால் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ......................................................... வானொலி நிகழ்ச்சி/ ஆக்கம் வானொலி அரச விருது வழங்கல் விழா 2019 தொடர்பாக சமர்ப்பிப்பதற்கான உரிமை மற்றும் அதிகாரம் என்னையே சார்ந்தது. என்னால் சமர்ப்பிக்கப்படுகின்ற வானொலி நிகழ்ச்சி ஆக்கம் தொடர்பாக உரிமை கோருவதற்கு வேறு எவரும் அல்லது எந்தவொரு நிறுவனமும் இல்லை என்றும் உறுதியளிக்கின்றேன். ஏதாவது கேள்விகள் ஏற்பட்டால் அதனை தீர்த்து வைப்பதும் எனது பொறுப்பாகவே கருதுகின்றேன்.

தயாரிப்பாளர் / அறிவிப்பாளர்/ விண்ணப்பதாரியின் பெயர் :----.
கையொப்பம் :----.
திகதி :----.

6. நிறுவனத்தின் பரிந்துரை :
வானொலி அரச விருது வழங்கல் விழா 2020 இற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ள, ..................................... எனும் தயாரிப்பாளர்/ அறிவிப்பாளர்/ கலைஞரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ..................................... நிகழ்ச்சி/ ஆக்கம் .................. .................................................................... வானொலி சேவையில் ஒலிபரப்பப்பட்டதாகவும் 2018, யூலை மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2019, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் குறித்த வானொலி சேவையில் ஒலிபரப்பப்பட்டதாகவும், குறித்த விழாவிற்கு சமர்ப்பிப்பதை அனுமதிப்பதாகவும் குறிப்பிடுகிறேன். பிறிதொரு நபரொருவர்/ நிறுவனமொன்று உரிமைகள் முன்வைக்கப்பட்டால் அச்சிக்கலை தீர்த்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்பதாகவும் குறிப்பிடுகின்றேன்.

நிறுவனத் தலைவர்/ பிரதிநிதியின் பெயர் :----.
பதவிப் பெயர் :----.
கையொப்பம் :-----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ பதவி முத்திரை)

10-660

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.